பொது தகவல்: டான்மேக் எனப்படும் தமிழ்நாடு மேக்னசைட் நிறுவனம் சேலத்தை தலைமை இடமாகக் கொண்டு செயல்படு கிறது. தமிழக அரசின் பொதுத்துறை நிறுவனமாகும். இது, சேலம் மாவட்டத்தில் உள்ள அரிய வகை வெள்ளைக்கல் பாறை பகுதிகளில் இருந்து மேக்னசைட் தாதுவை வெட்டி எடுக்கிறது.

பொது தகவல்: டான்மேக் நிறுவனம் மேக்னசைட் தாதுவை சுத்திகரித்து, டெட் பர்ன்ட் மேக்னசைட் (டிபிஎம்), லைட்லி கால்சின்டு மேக்னசைட் (எல்சிஎம்) என இரு வகை மேக்னசைட்களாக பிரித்து அனுப்புகிறது. மேக்னசைட்டில் இருந்து, அதிக வெப்ப உலைகளுக்கான செங்கல், லைனிங் தயாரிக்கப் படுகிறது.

நெமிலி அடுத்த திருமால்பூர் மணிகண்டீஸ்வரர் கோயிலில் நேற்று தேரோட்டத்தில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு வடம்பிடித்து இழுத்தனர்.

திருமால்பூர் மணிகண்டீஸ்வரர் கோயிலில் தேரோட்டம்

அரக்கோணம்

ராணிப்பேட்டை மாவட்டம் நெமிலி அடுத்த திருமால்பூர் கிராமத்தில் பழமை வாய்ந்த அஞ்சனாட்சி சமேத ஸ்ரீ மணி கண்டீஸ்வரர் கோயில் உள்ளது. இக்கோயிலில் மாசி மக பிரம்மோற்சவ விழா கடந்த 20 -ம் தேதி தொடங்கியது.

விழாவையொட்டி தினசரி துவஜாரோகணம், சூரிய பிரபை, பூத, சேஷ வாகனங் களில் சிவபெருமான் திரு வீதியுலா வந்து பக்தர்களுக்கு அருள்பாலித்து வந்தார்.

இந்நிலையில் நேற்று காலை பிரம்மோற்சவ விழாவில் முக்கிய நிகழ்வான தேரோட்டம் நடைபெற்றது. இதையடுத்து, அலங்கரிக்கப்பட்ட தேரில் சிறப்பு அலங்காரத்தில் ஸ்ரீ அஞ்சனாட்சி சமேத ஸ்ரீ மணிகண்டீஸ்வரர் மாட வீதிகளில் உலா வந்தார்.

இதில், திரளான பக்தர்கள் கலந்து கொண்டு, பக்தி பரவசத்துடன் தேரை வடம் பிடித்து இழுத்தனர். தேர் வரும் வீதிகளில் பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது. நெமிலி காவல் ஆய்வாளர் பாபு தலைமையில் 30-க்கும் மேற்பட்ட போலீஸார் பாது காப்பு பணியில் ஈடுபட்டனர்.

திருப்பத்தூர் மாவட்டத்தில்

நிலுவையிலுள்ள வழக்குகளை விரைந்து முடிக்க வேண்டும்

எஸ்.பி. சியாமளாதேவி அறிவுறுத்தல்

திருப்பத்தூர்

திருப்பத்தூர் மாவட்டத்தில் நிலுவையிலுள்ள வழக்குகளை விரைந்து முடிக்க போலீஸாரு டன், நீதித்துறை இணைந்து செயல்பட வேண்டும் என எஸ்.பி. சியாமளாதேவி அறிவுறுத்தி உள்ளார்.

திருப்பத்தூர் எஸ்.பி. அலுவ லகத்தில் குற்றவியல் நீதி அமைப்பை சிறப்பாக செயல் படுத்த போலீஸார் மற்றும் அரசு தரப்பு வழக்கறிஞர்கள் இடையிலான ஒருங்கிணைப்பு கூட்டம் நேற்று நடைபெற்றது.

இக்கூட்டத்துக்கு குற்ற வழக்கு தொடர்பு துறை துணை இயக்குநர் சிவகாமி முன் னிலை வகித்தார். எஸ்.பி. சியா மளாதேவி தலைமை தாங்கி பேசும்போது, "இந்த கூட்ட மானது குற்றவியல் நீதித்துறை யின் ஒருங்கிணைப்பை மேம் படுத்தவும், வழக்கின் விசா ரணை மற்றும் வழக்கு தொடுப்பு செயல்முறைகளை வலுப்படுத்தும் நோக்கமாக கருதப்படுகிறது.

மேலும், குற்ற வழக்குகள் தொடர்பான தகவல்களை பகிர்ந்து கொள்ளவும், நீதித் துறையின் செல்பாடுகளை மேம் படுத்த இது உதவுகிறது. திருப் பத்தூர் மாவட்டத்தில் நிலுவை யில் உள்ள வழக்குகளை விரைந்து முடிக்க போலீஸாரு டன், நீதித்துறை இணைந்து செயல்பட வேண்டும். தண்டனை பெறக்கூடிய வழக்குகளை துரிதப்படுத்த வேண்டும்.

பல ஆண்டுகளாக நீதி மன்றங்களில் உள்ள வழக்கு களை எவ்வாறு முடிக்க வேண் டும். பிடிவாரண்ட் பிறப்பிக் கப்பட்டவர்களை கைது செய்து வழக்குகளை விரைந்து முடிக்க வேண்டும். கொலை மற்றும் ஆதாயக்கொலை வழக்குகளில் பாதிக்கப்பட்டவர்கள் நீண்ட நாட்கள் ஆகியிருந்தால் அவர்களுக்கான நீதிமன்ற வழக்கு தேதிகளை போலீஸார், நீதித்துறை சேர்ந்து வழக்கு தொடர்பான விவரங்களை அவர்களுக்கு அவ்வப்போது நினைவூட்ட வேண்டும்.

குற்றவாளிகளுக்கு நீதிமன் றத்தில் கட்டாயம் தண்டனை பெற்றுத்தர வேண்டும். சட்டம் -ஒழுங்கை முறையாக பராமரிக்க வேண்டும்" என்றார்.

இக்கூட்டத்தில் போலீஸார், அரசு தரப்பு வழக்கறிஞர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

திருப்பத்தூர் எஸ்.பி. அலுவலகத்தில் போலீஸார் மற்றும் அரசு தரப்பு வழக்கறிஞர்கள் இடையிலான ஒருங்கிணைப்பு கூட்டம் எஸ்.பி.சியாமளாதேவி தலைமையில் நேற்று நடை பெற்றது.

திருவண்ணாமலை மாவட்டத்தில்

தமிழக முதல்வரின் பிறந்தநாளை நலத்திட்டங்களை வழங்கி கொண்டாடுவோம்

அமைச்சர் எ.வ.வேலு அறிக்கை

திருவண்ணாமலை

திருவண்ணாமலை மாவட்டத் தில் திமுக சார்பில் தமிழக முதல்வரும், திமுக தலைவரு மான மு.க.ஸ்டாலின் பிறந்த நாளை மக்கள் நல திட்டங் களோடு வருடம் முழுவதும் கொண்டாடுவோம் என பொதுப் பணி துறை அமைச்சர் எ.வ.வேலு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர், வெளியிட்டுள்ள அறிக்கை யில்,"தமிழக மக்களுக்கு பல் வேறு திட்டங்களையும், நல திட்டங்களையும் வழங்கி வரும் முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாள் மார்ச் 1-ம் தேதி (நாளை) கொண்டாப்படுகிறது.

தமிழ் சமூகத்தை ஒரு சர்வதேச சமூகமாக மாற்றி காட்டிய மறைந்த முதல்வர் கருணாநிதி வழியில் கூட்டணி இயக்கங்கள் மட்டுமல்ல, எதிர்க்கட்சிகளும் பாராட்டுகிற திராவிட மாடல் அரசை நடத்தி வரும் தமிழர்களின் எழுச்சி வடிவம் தரும் முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளை சிறப்பாக கொண்டாடப்பட உள்ளது.

திருவண்ணாமலை வடக்கு, தெற்கு மாவட்டங்களில் உள்ள அனைத்து அமைப்பு நிர்வாகி கள், மார்ச் 1 -ம் தேதி அன்று பிறந்த குழந்தைகளுக்கு தங்க மோதிரம் அணிவிப்பது, திமுக கொடியேற்றுவது, அரசின் சாதனைகளை விளக்கி பொதுக் கூட்டங்கள் நடத்துவது, மக்க ளுக்கு தேவையான நலத் திட்டங்களை வழங்குவது, ரத்த தானம், மருத்துவ முகாம், மக்க ளின் தேவை அறிந்து உதவி களை செய்து பிறந்தநாளை எழுச்சியாக கொண்டாட வேண் டும்" என தெரிவித்துள்ளார்.

வரி விளம்பரங்கள்

சுய செய்தி

பெயர்மாற்றம்

CHANGE OF NAME
I, KADHAR BASHA
(Old name)
S/o. John Basha
date of birth : 10.06.1980
residing at A L 18,
Hari Om 3rd Street, Phase - 3,
Vallalar, Sathuvachari,
Vellore District,
Tamil Nadu - 632009.
shall henceforth be known as
KATHER BASHA
(New name)
Vellore, 27.02.2026. Kadhar Basha

ஆட்கள் தேவை

பொது

Need 3 persons steam ironin near TIDEL OMR. Available Training. 9am-6pm, 15000 CT:9738050504

பொது

பொது அறிவிப்பு

பொது அறிவிப்பு

வேலூர் மாவட்டம், வேலூர் வட்டம், சேண்பாக்கம், திருவள்ளுவர் தெரு, எண்.7/4 - ல் வசித்துக் கொண்டு வரும் **R.பூவண்ணன்** த/பெ. ராமசாமி, ஆகிய நான் மேற்படி முகவரியில் வசித்துக் கொண்டு வருகின்றேன். என்னுடைய மனைவி **சோனியா** க/பெ. பூவண்ணன், என்பவர் கடந்த **21.02.2022**-ந் தேதி அன்று வேலூர், சேண்பாக்கத்தில் உள்ள முகவரியில் உள்ள வீட்டில் இறந்துவிட்டார். இறந்ததை பதிவு செய்ய விண்ணப்பம் செய்துள்ளேன். இது தொடர்பாக ஆட்சேபனை ஏதும் இருப்பின் இவ்விளம்பரம் கண்ட 15 நாட்களுக்குள் வேலூர் வருவாய் கோட்டாட்சியர் அலுவலர், அவர்களிடம் நேரிலோ (அ) எழுத்து மூலம் தெரிவித்துக் கொள்ள வேண்டியது.

மனுதாரர்
R.பூவண்ணன்
செல்: 8667212284

பொது அறிவிப்பு

எனது கட்சிக்காரர் **ஜே.வரலட்சுமி**, க/பெ. ஜோதி, கதவிலக்கம் எண்.26, உண்டியல் தர்மய்யா தெரு, சுண்ணாம்புபேட்டை, குடியாத்தம் தாலுக்கா, வேலூர் மாவட்டம் - 632602-ல் வசிக்கிறார், கீழே குறிப்பிடப்பட்ட சொத்து ராமகிருஷ்ண நாயுடுவுக்குச் பொது அதிகார ஆவண மற்றும் அவர் ஏற்படுத்திய அசல் பதிவுசெய்யப்பட்ட **ஆவண எண். 956/2019, 07.02.2019** தேதியிட்ட பொது அதிகாரப் பத்திரத்தை எனது கட்சிக்காரர் மேற்கூறிய ஆவணத்தின் ஜெராக்ஸ் எடுப்பதற்காக **15.02.2026** அன்று குடியாத்தம் புதிய பேருந்து நிலையம் அருகே தொலைந்து போனதால், மேற்கண்ட பத்திரம் இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை. மேற்கூறிய எனது கட்சிக்காரர் ஆவணத்தை யாராவது கண்டெடுத்தால், எனக்கு அல்லது எனது கட்சிக்காரர் அல்லது குடியாத்தம் நகர காவல் நிலைய காவல் ஆய்வாளரிடம் ஒப்படைக்கவும் தெரிவிக்கலாம்.

சொத்து விவரம்

வேலூர் மாவட்டம், வேலூர் பதிவு மாவட்டம், குடியாத்தம் துணை பதிவு அலுவலகம், தாழையநாதம், சர்க்கார் புஞ்சை சர்வே எண். 167/1, ஹெக்டர் 0.24.5 தீர்வை ரூ.1.22, ஏக்கர் 0.60½ சென்ட் இதிலும் மேற்படி கிராம சர்க்கார் புஞ்சை சர்வே எண்.161/2E, ஹெக்டர் 0.15.0 தீர்வை ரூ.2.37 ஏக்கர் 1.20 சென்ட் மற்றும் ஏக்கர் 0.16 சென்ட் இதிலும் மேற்படி கிராம சர்க்கார் புஞ்சை சர்வே எண். 161/2D, ஹெக்டர் 0.48.5, தீர்வை ரூ.2.37 காசு, இதன் ஏக்கர் 1.20 சென்ட் இதில் ஏக்கர் 0.16 சென்ட் இதிலும் ஆக மேற்கண்ட சர்வே எண்களில் கலந்தாற்போல வரும் மனை எண்கள். 30,1,2,3,4.

P.முல்லை வேந்தன், B.A., L.L.B., வழக்கறிஞர், குடியாத்தம்

ஆப்காவில் 8-வது பிரிவு பயிற்சி நிறைவு விழா

வேலூர்

வேலூர் தொரப்பாடியில் உள்ள ஆப்கா மையத் தில் 8-வது பிரிவு தகுதி காண் அதிகாரி பணிக்கான 3 மாதங்கள் பயிற்சி நிறைவு விழா நேற்று நடை பெற்றது.

இந்த நிகழ்ச்சிக்கு ஆப்கா இயக்குநர் பிரதீப் தலைமை தாங்கி பயிற்சியை நிறைவு செய்தவர்களுக்கு சான்றிதழ் களை வழங்கி பாராட்டினார்.

தெலங்கானா, தமிழ்நாடு உள்ளிட்ட மாநிலங்களைச் சேர்ந்த 17 பேர் பயிற்சியை நிறைவு செய்துள்ளனர்.

வேலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாற்றுத் திறனாளிகளுக்கான நான்கு வகை திருமண நிதியுதவி வழங்கும் திட்டத்தின்கீழ் 10 மாற்றுத் திறனாளிகளுக்கு தங்க நாணயங்களை ஆட்சியர் வி.ஆர்.சுப்புலட்சுமி நேற்று வழங்கினார். படம்: வி.எம்.மணிநாதன்.

போளூரில் நிலம் அளவீடு செய்ய

ரூ.5 ஆயிரம் லஞ்சம் பெற்ற நில அளவையர் கைது?

லஞ்ச ஒழிப்பு துறையினர் நடவடிக்கை

திருவண்ணாமலை

திருவண்ணாமலை மாவட்டம் போளூர் வி.எஸ். பிள்ளையார் கோயில் தெருவைச் சேர்ந்தவர் முருகன் மகன் சின்னராஜ்(30). இவர், கடந்த சில தினங்களுக்கு முன்பு வீடு, நிலம் அளவீடு செய்வதற்காக போளூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் மனு அளித்துள்ளார்.

ஆனால், பல நாட்கள் ஆகியும் அளவீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படாததால், நகர சர்வேயராக பணிபுரிந்து வரும் சக்திவேலுவை நாடியுள்ளார்.

அப்போது, அவர் இடத்தை அளக்க வேண்டும் என்றால் ரூ.6 ஆயிரம் தரவேண் டும் என கேட்டதாக கூறப்படு கிறது. லஞ்சம் கொடுக்க விரும் பாத சின்னராஜ், திருவண் ணாமலை லஞ்ச ஒழிப்பு துறையில் புகார் அளித்தார்.

இந்நிலையில் நேற்று லஞ்ச ஒழிப்பு துறை காவல் ஆய்வாளர் அருள் பிரசாத் தலைமையில், சின்னராஜிடம் பணத்தை கொடுத்து அனுப்பி வைத்து பின் தொடர்ந்து சென்றுள்ளனர். அப்போது, போளூர் புறவழிச்சாலை பகுதி யில் நில அளவையர் சக்தி வேலுவை சந்தித்து சின்ன ராஜ் ரூ.5 ஆயிரத்தை கொடுத் துள்ளார். அப்போது, அங்கு மறைந்திருந்த லஞ்ச ஒழிப்பு துறை போலீஸார் சக்தி வேலுவை கையும் காளவுமாக பிடித்து போளூர் வட்டாட்சியர் அலுவலகத்துக்கு அழைத்து சென்று விசாரணை நடத்தி வருகின்றனர். மேலும், சக்திவே லுவுக்கு உடந்தையாக இருந்த தாக போளூர் அடுத்த அத்திமூர் அருகே உள்ள திண்டிவனம் கிராமத்தைச் சேர்ந்த தாமோ தரன் என்பவரிடமும் விசாரணை நடத்தி வருகின்றனர்.

திருப்பத்தூர் மாவட்டத்தில் 10 வட்டாட்சியர்கள் பணியிட மாற்றம்

ஆட்சியர் சிவசௌந்திரவல்லி உத்தரவு

திருப்பத்தூர்

திருப்பத்தூர் மாவட்டத்தில் 10 வட்டாட்சியர்களை பணியிட மாற்றம் செய்து ஆட்சியர் சிவசௌந்திர வல்லி உத்தரவிட்டுள் ளார்.

திருப்பத்தூர் மாவட்ட வருவாய் அலகில் பணியாற்றி வந்த வட்டாட்சியர்கள் நிர்வாக நலன் கருதி பணி யிட மாற்றம் செய்யப் பட்டுள்ளனர்.

அதன்படி, ஆம்பூர் சமூக பாதுகாப்பு திட்ட தனி வட்டாட்சியர் பூங்கொடி, திருப்பத்தூர் பறக்கும்படை வட்டாட்சியராகவும், அங்கிருந்த சிவசுப்பிர மணியம் மாவட்ட ஆட்சியர் அலுவலக மேலாளர் (நீதியியல்) பிரிவுக்கும், அங்கிருந்த சிவப்பிரகாசம் வாணியம்பாடி கோட்டாட்சியரின் நேர்முக உதவியாளராகவும், அங்கிருந்த சம்பத் திருப்பத்தூர் சமூக பாதுகாப்பு திட்ட தனி வட்டாட்சியராகவும், அங்கிருந்த உமா ரம்யா மாவட்ட வழங்கல் அலுவலரின் நேர்முக உதவியாளராகவும், அங்கிருந்த கிருஷ்ண வேணி திருப்பத்தூர் ஆதி திராவிடர் நலத்துறை தனி வட்டாட்சியராகவும், அங்கிருந்த சுமதி மாவட்ட ஆட்சியர் அலுவலக பேரிடர் மேலாண்மை தனி வட்டாட்சியராகவும், அங்கிருந்த மோகன் ஆம்பூர் சமூக பாதுகாப்பு திட்ட தனி வட்டாட்சியராக பணியிடம் மாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

ஏலகிரி மலை அத்தனா வூர் நிலவரி திட்டம் தனி வட்டாட்சியர் அனந்தகிருஷ்ணன் திருப்பத்தூர் கோட்டாட்சி யரின் நேர்முக உதவி யாளராகவும், அங்கிருந்த பத்மநாபன் ஏலகிரி மலை நிலவரி திட்டம் தனி வட்டாட்சியராக பணியிட மாற்றம் செய்யப்பட்டுள்ளார் என மாவட்ட ஆட்சியர் சிவ சௌந்திரவல்லி நேற்று உத்தர விட்டுள்ளார்.

sushant.chandel@hindutamil.co.in

TTDC
The Managing Director on behalf of
TAMIL NADU TOURISM DEVELOPMENT CORPORATION LIMITED
Notice inviting Bids for the work as detailed in table below in
"SINGLE BID" (LUMPSUM CONTARCT)
e-Tender Notice Reference No. 4087-A/Engg/Proj/2026 Dt: 26 .02.2026

Sl. No	Name of work	Earnest Money Deposit (in Rs.)	Tender Last date	Tender Opening Date
1	"SINGLE BID"			
1	Development of Jina Kanchi Jain Math Temple in Melchithamur at, Villupuram District.	Rs.1,00,000/-	06.03.2026	06.03.2026
2	Development of Thirumalai Jain Temple in polur at Thiruvannamalai District.	Rs.1,78,000/-	06.03.2026	06.03.2026
3	Development of Tirthankara Jain Temple in Vallimalai at Vellore District.	Rs.1,55,000/-	06.03.2026	06.03.2026
4	Development of Thirunarungondai Sri Parshvanath Temple in Thirunarunkundram at kallakurichi District.	Rs.1,55,000/-	06.03.2026	06.03.2026
5	Development of Mallinathar Jain temple in Mannarkudi at Thiruvarur District	Rs.2,42,000 /-	06.03.2026	06.03.2026
2	Download tender document	Through Online https://tntenders.gov.in/		
3	Time/Date of receipt/ opening of bids	i) Last date and time for submission of Bid documents along with EMD upto 3.00 PM on mentioned date above. ii) Opening of bids will be on 3.30 PM on mentioned date above.		
4	Address for Communications	The Managing Director, Tamil Nadu Tourism Development Corporation, No.2, Wallajah Road, Tourism Complex, Chennai, Tamil Nadu - 600 002, India, Website: www.ttdconline.com, Email: pe.ttdc@gmail.com , Phone: 044-2533 3555		

DIPR/1465/TENDER/2026 MANAGING DIRECTOR

pnb पंजाब नैशनल बैंक punjab national bank
.....भरोसे का प्रतीक ...the name you can BANK upon!
(A GOVERNMENT OF INDIA UNDERTAKING)

சொத்து மீட்பு மேலாண்மை கிளை தெற்கு டெல்லி, 4வது தளம், 7, பிகாஜி காமா பிளேஸ், புது டெல்லி-110066 Email : cs4168@pnb.co.in

அசையா சொத்துக்கள் விற்பனைக்கான விற்பனை அறிவிப்பு

நிதிச் சொத்துக்களைப் பத்திரமாக்குதல் மற்றும் மறுகட்டமைப்பு செய்தல் மற்றும் பாதுகாப்பு வட்டிச் சட்டம் 2002 மற்றும் பாதுகாப்பு வட்டி (அமலாக்கம்) சட்டம் 2002-ன் விதி 8(6)-ன்கீழ் அசையா சொத்துக்கள் மின்-ஏலம் விற்பனை. இதன்மூலம் பொது மக்களுக்கு பொதுவாகவும், கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடன்தாரர்(கள்), மற்றும் ஜாமீன்தாரர்(கள்)-க்கு குறிப்பாகவும், கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையாச் சொத்துக்கள் கடன் அளித்தவரிடம் அடமானம் வைக்கப்பட்டுள்ளவை வங்கி/கடன் அளித்தவரின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி ஆக்கபூர்வ/பிசிக்கல்/சிம்பொலிக் எடுத்துள்ளார், முறையே கடன்தாரர்(கள்) மற்றும் ஜாமீன்தாரர்(கள்) இடமிருந்து நிலுவைத் தொகையை வசூலிக்க கீழ்குறிப்பிட்டுள்ள அட்டவணையின்படி "எங்கு உள்ளதோ", "எப்படி உள்ளதோ" மற்றும் "எந்த நிலையில் உள்ளதோ" என்ற அடிப்படையில் விற்பனை செய்யப்படும். ரிசர்வ் தொகை மற்றும் முன்வைப்புத் தொகை சொத்துக்களின் எதிராக முறையே கீழ்குறிப்பிட்டுள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ளன.

அடமான சொத்துக்களின் விற்பனை அட்டவணை

வ. எண்.	கிளை பெயர் / கணக்கு பெயர் / கடன்தாரர்/ஜாமீன்தாரர்கள் கணக்கு பெயர் மற்றும் முகவரி	அடமான அசையா சொத்துக்கள் விவரம்/ உரிமையாளர் பெயர் (அடமான சொத்து(கள்))	E) SARFAESI சட்டம் 2002-ன் விதி 13(2)-ன்கீழ் கோரிக்கை அறிவிப்பு நாள் / F) கோரிக்கை அறிவிப்பின்படி தொகை / G) SARFAESI சட்டம் 2002-ன் விதி 13(4)-ன்கீழ் சுவாதீன நாள் / H) சிம்பொலிக்/பிசிக்கல்/ ஆக்கபூர்வ சுவாதீனம் தன்மை	A) ரிசர்வ் தொகை / B) EMD / C) ஏலம் உயர்வு தொகை	மின்-ஏலம் நாள்/ நேரம்	கடன் அளித்தவரால் அறியப்படும் வில்லங்கம் விவரங்கள்	அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி/ நோடல் அதிகாரி பெயர் மற்றும் தொடர்பு எண்
1.	PNB BO Okhla NSIC (060200), புதுடெல்லி M/s. GENUINE INTERNATIONAL CC A/c எண். 3078008700001741 & CC A/c 4370008700001143 M/s. Genuine International வழியாக K கணேஷ் முகவரிகள் : • ஏ-292. 2வது தளம், Okhla தொழிற்சாலை ஏரியா, பேஸ் 1 காவல் நிலையம் அருகில், டெல்லி-110020, • 416/2, கிராமம் மற்றும் PO ஜிடெமி, M G சாலை, டெல்லி-110030, • 165, காளி எண்.2, கபாஷ்ரா, புது டெல்லி-110037, • 365, Ice தொழிற்சாலை அருகில், கபாஷ்ரா, புது டெல்லி-110037, • காஷ்ரா எண்.156, சந்தன்ஹோலா, புது டெல்லி-110074, • D-88/3, Okhla தொழிற்சாலை ஏரியா, பேஸ் 1, டெல்லி-110020, • C-91, DDA ஷெட், Okhla தொழிற்சாலை ஏரியா, பேஸ் 1, டெல்லி - 110020, • மனை எண். 42, சிட்கோ தொழிற்சாலை எஸ்டேட், சிப்காட், ராணிபேட், வாலாஜா தாலுகா, வேலூர் மாவட்டம் - 632403, சென்னை, • திரு. K கணேஷ் த/பெ. B கண்ணன், மனை எண். 104/FF KH No.788 Gali No.6D K பிளாக், மாலிக்பூர் கோஹி அலைஸ் ரங்பூரி தெற்கு மேற்கு டெல்லி - 110037. • திரு. K கணேஷ் த/பெ. B கண்ணன், கதவு எண். 429/1, பேஸ் 1 பாரதி நகர், வள்ளார் நகர், சத்துவாசாரி, வேலூர்-9, சென்னை. திரு. N அசீஸ் ரஹ்மான் (ஜாமீன்தாரர்) முகவரிகள் - கதவு எண். எச்.4, பழைய ஹவுசிங் போர்ட், சிப்காட், ராணிபேட், வேலூர் மாவட்டம், சென்னை-632403. • வீட்டு எண்.4, TNHB குவார்ட்டர்ஸ், சிப்காட், ராணிபேட்-632403. • பழைய திருத்தணி சாலை விரிவு வடக்கு கிழக்கு முடிவு (ச.எண். 669/1ஏ, 699/2ஏ, ஆனந்தலை கிராமம்) மேல்புதுப்பேட், வாலாஜா தாலுகா, வேலூர் மாவட்டம்-632513 • கதவு எண். 114, பழைய ஹவுசிங் போர்ட், சிப்காட், ராணிபேட், வேலூர் மாவட்டம், சென்னை-632403. • S5/525, அமீன் அப்பார்ட்மெண்ட் IOB நகர், சிப்காட், ராணிபேட் தொழிற்சாலை ஏரியா, வேலூர், தமிழ்நாடு - 632403.	அடமான சொத்தானது கதவு எண்./மனை எண்.42, சிட்கோ தொழிற்பேட்டை, சிப்காட், லேஅவுட் எஸ்.எப்.எண். 62,63,68,69 மற்றும் 70, காரை வருவாய் கிராமம் மற்றும் எஸ்.எப்.எண். 225, 226, 352 மற்றும் 353, நரசிங்கபுரம் வருவாய் கிராமம், வாலாஜா தாலுகா, வேலூர் மாவட்டத்திற்குட்பட்டது. அளவுகள் 7000 சதுர அடி. M/s. Genuine International மூலம் திரு. K கணேஷ் பெயரில் உள்ளது.	E) 08.04.2019 F)Rs.235.53 Lacs + further interest & expenses G) 20.12.2019 H) Symbolic	A)Rs.94.00 lacs B) Rs.9.40 lacs C) Rs. 1,00,000	27.03.2026 11:00 am to 04:00 pm	சொத்து விற்பனையில் SA நிலுவை/ வில்லங்கம் ஏதும் இல்லை	ரஜேஷ் குமார் 8451880664

மின்-ஏலம் விற்பனை பற்றிய விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் : பாதுகாப்பு வட்டி (அமலாக்கம்) விதி 2002-ல் விவரிக்கப்பட்டுள்ள விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின்படி விற்பனை நடைபெறும் மற்றும் பின்வரும் நிபந்தனைகள். (1) ஏல விற்பனையானது "ஆன்லைன் மூலம் மின்-ஏலம்" https://www.baanknet.com வழியாக நடைபெறும். (2) இணையதளம் (https://baanknet.com) வழியாக மின்-ஏலமானது மின்-ஏலம் சேவை வழங்குநர் M/s. PSB Alliance Pvt. Ltd. அதன் பதிவு அலுவலகம் யூனிட் 1, 3வது தளம், VIOS கமர்ஷியல் டவர், வடலா டிரக் டெர்மினர் அருகில், வடலா கிழக்கு மும்பை-400037 (உதவி எண். +91 8291220220, Email Id : support.ebkray@psballiance.com) மூலம் நடத்தப்படும். விருப்பமுள்ள ஏலதாரர்கள்/வாங்குபவர்கள் மின்-ஏலத்தில் பங்குபெற மின்-ஏலம் சேவை வழங்குநர் இணையதளம் https://ebkray.in பார்க்கவும். சேவை வழங்குநர் ஆன்லைன் செயல்விளக்கம்/பயிற்சி மின்-ஏலம் பார்ட்டல் வழியாக அளிப்பார்கள். (3) விற்பனை அறிவிப்பு தொகுப்பின் பொது நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகள் பின்வரும் இணையதளத்தில் கிடைக்கும் (1) https://baanknet.com (2) www.pnbindia.in (4) வெற்றிகரமான ஏலதாரர் வங்கிக்கு செலுத்தும் தொகை விற்பனை வருவாய் வரி சட்டம் 1961 மற்றும் பிரிவு 194-1ஏ-ன்கீழ் TDS-க்கு பரிசீலனை உட்பட்டது மற்றும் மீதமுள்ள 75 சதவீதம் ஏலத்தொகை/ BIT தொகையின் முழு வைப்புத் தொகையை டெபாசிட் செய்யும் நேரத்தில் மட்டுமே வெற்றிகரமான ஏலதாரர் TDS செலுத்த வேண்டும். (5) சொத்தானது "எங்கு உள்ளதோ" மற்றும் "எப்படி உள்ளதோ" மற்றும் "எந்த நிலையில உள்ளதோ" என்ற அடிப்படையில் விற்பனை செய்யப்படும். (6) மேலே உள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பாதுகாக்கப்பட்ட சொத்துக்களின் விவரங்கள் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியின் சிறந்த அறிவின்படி தகவலுக்கு கூறப்பட்டுள்ளன, ஆனால் எந்தவிதமான பிழை, பிழைஅறிக்கை அல்லது தவிர்த்தல் குறித்தவைகளுக்கு அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி பொறுப்பேற்கமாட்டார். (7) SARFAESI சட்டம், பாதுகாப்பு வட்டி (அமலாக்கம்) விதிகள், 2002-ன் விதி 13(8) மற்றும் விதி 8(6)-ன்கீழ் மேற்குறிப்பிட்ட வ.எண். 01 முதல் வ.எண்.02 வரை அனைவருக்கும் வழங்கப்படும் அறிவிப்பாகும். (8) விவரங்கள் விற்பனை நிபந்தனைகளுக்கு தயவுசெய்து https://baanknet.com & www.pnbindia.in பார்வையிடவும்.

நாள் : 25.02.2026, இடம் : புது டெல்லி அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, பஞ்சாப் நேஷனல் வங்கி

இந்து தமிழ் திசை

பொறுப்பல்ல: இந்தச் செய்தித்தாளில் பிரசுரம் ஆகியுள்ள விளம்பரங்களின் அடிப்படையில் செயல்படுமுன், அவற்றில் உள்ள தகவல்கள் சரியானவைதானா என்பதை போதுமான அளவு விசாரித்து சரிபார்த்துக்கொள்ளுமாறு வாசகர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். விளம்பரங்கள்/ விளம்பரதாரர் / அவர்களின் தயாரிப்புகள் / சேவைகள் போன்றவற்றின் நம்பகத்தன்மைக்கு இந்தச் செய்தித்தாளின் உரிமையாளரும் பதிப்பாளருமான கஸ்தூரி & சன்ஸ் லிமிடெட் / கே.எஸ்.எல். மீடியா லிமிடெட் உத்தரவாதம் அளிக்கவில்லை. இந்தச் செய்தித்தாளில் வெளியாகும் விளம்பரங்களால் ஏதேனும் சேதம் அல்லது இழப்பு ஏற்படும் பட்சத்தில், இந்தச் செய்தித் தாளின்/ மேற்சொன்ன நிறுவனங்களின் உரிமையாளர், பதிப்பாளர், அச்சிடுவோர், ஆசிரியர், இயக்குநர்கள், ஊழியர் கள் ஆகியோர் எந்தச் சூழலிலும் எந்த வகையிலும் அதற்குப் பொறுப்பாகமாட்டார்கள்.

படைப்புகளை அனுப்புவோர் பிரதி எடுத்துவைத்துக்கொண்டு அனுப்பவும். பிரசுரமாகாதவற்றைத் திரும்ப அனுப்ப இயலாது.

எமது பதிப்புகள்: சென்னை, புதுவை, வேலூர், கோவை, சேலம், திருச்சி, தஞ்சாவூர், மதுரை, ராமநாதபுரம், நெல்லை, பெங்களூரு, திருவனந்தபுரம்

Published by Vijaya Arun at Kasturi Buildings, 859-860, Anna Salai, Chennai 600002 on behalf of KSL MEDIA LIMITED, and Printed by Ra.Babu Vijay at THG PUBLISHING PVT.LTD. Plot B-6 & B-7, CMDA Industrial Complex, Maraimalai Nagar, Chengleput Taluk, Kancheepuram Dist.Pin: 603209, Editor: V. Venkateswaran (Responsible for selection of news under the PRP Act).

CH-VE